**பாடம் 13**

# சுவிசேஷமும் சபையும்



**மனன வசனம்**

**ஆகையால் நமக்குக் கிடைக்கும் சமயத்திற்குத் தக்கதாக, யாவருக்கும், விஷேமாக விசுவாசக் குடும்பத்தார் களுக்கும், நன்மை செய்யக்கடவோம். கலா 6:10.**

**ஆராய்ச்சிக்கு**

**கலா 6:1-10; மத் 18:15-17; 1கொரி 10:12; ரோமர் 15:1; யோவான் 13:34; லூக் 22:3.**

செப்டம்பர் 16 பிற்பகலில், இந்த வேதப்பகுதிகளை வாசித்து, மனனவசனத்தை மனனம்செய்க.

உருளை விவசாயிகள் சிலர் பெரிய உருளைக் கிழங்குகளைத் தங்களுக்கு வைத்துக்கொண்டு, சிறிய உருளைக் கிழங்குகளை நடவுசெய்தார்கள். இவ்வாறு சில தடவை அறுவடையும் செய்தார்கள். ஆனால், உருளைக்கிழங்குதான் கோலிக்காய் அளவு சிறுத்துப்போனது. அந்த நிகழ்ச்சியானது வாழ்க்கையின் ஒரு முக்கிய நியதியை அந்த விவசாயிகளுக்குக் கற்றுத்தந்தது.

"வாழ்க்கையில் சிறந்ததைத் தங்களுக்கு வைத்துக் கொண்டு, மிச்சம் மீதியை விதைக்கமுடியாது. எதை விதைக்கிறோமோ அதுதான் முளைத்துவரும்" என்பது வாழ்க்கையின் விதி.

'வேறுவிதமாகச் சொன்னால், சிறியதை (உருளைக் கிழங்குகளை) விதைப்பதுதான் பொதுவாகக் காணப் படுகிறது. வாழ்க்கையின் பெரிய காரியங்களை நாமே வைத்துக்கொண்டு, மிச்சம் மீதியை விதைக்கிறோம். ஆவிக்குரிய நியதியில் ஏதாவது மாற்றம் நிகழவேண்டும்; நாம் பிறரிடம் சுயநலத்தோடு நடந்தாலும், அவர்கள் சுயநலமின்றி நடக்கவேண்டும் என்று எதிர்பார்க்கிறோம்.' - *International Student Fellowship Newsletter, March 2007.*

கலா 6:1-10 இல் இந்த நியதியை வைத்து பவுல் பேசுகிறார். விசுவாசிகள் 'ஒருவரையொருவர் கடித்து, பட்சிப்பதற்குப்' பதிலாக, ஒருவர் நலனை ஒருவர் நாடும் விதத்தில், ஆவியானவர் வழிநடத்தும் ஓர் இடமாக, சபை திகழவேண்டும். கலா 5:15. கிருபையால் நாம் இரட்சிக்கப்பட்டிருப்பதை அறிந்து, தாழ்மையோடும், பொறுமையோடும், உருக்கத்தோடும் பிறரை நடத்தவேண்டும்.

2017, செப்டம்பர் 23 வகுப்புக்காகப் படிக்கவேண்டிய பாடம்

## விழுகிறவர்களைச் சீர்பொருத்துதல்

கிறிஸ்தவ வாழ்க்கை தன்மை மிகமேன்மையான எதிர்பார்ப்புகள் பவுலுக்கு இருந்தாலும், நடைமுறை ஆலோசனைகளையே விசுவாசிகளுக்குக் கொடுக்கிறார். கலா 5:16; 6:1. மனிதர் பூரணர் அல்லர்; அர்ப்பணிப்புமிக்க கிறிஸ்தவர்கள் கூட தவறுசெய்ய வாய்ப்பிருக்கிறது. கலா 5:16. அப்படிப்பட்ட சூழ்நிலை ஏற்பட்டால், எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்று கலாத்தியருக்கு ஆலோசனை வழங்குகிறார்.

***விசுவாசி ஒருவர் குற்றத்தில் அகப்பட்டால், கிறிஸ்தவர்கள் எவ்வாறு நடந்துகொள்ளவேண்டும்? கலா 6:1; 18:15-17.***

எத்தகைய சூழ்நிலையை மனதில்வைத்து பவுல் பேசுகிறாரெனப் ப புரிந்து கொள்ள வேண்டும். 'அகப்படுதல்' எனும் வார்த்தை இதில் குறிப்பிடத்தக்கது. அதற்கு, 'கண்டுபிடிக்கப்படுதல், மேற்கொள்ளுதல்' என்று அர்த்தம்கூறலாம். ஒரு விஷயத்தின் இரு பக்கங்கள்பற்றி பவுல் யோசித்திருக்கக்கூடும். தவறுசெய்யும் ஒருவர் இன்னொரு விசுவாசியிடம், 'அகப்படுவது' என்பது ஒருபுறம். ஆனால், ஒரு 'நடத்தையால்' மேற்கொள்ளப்படுகிற அந்த நபர் (நீதி 5:22), தனக்கு சாதகமான சூழ்நிலைகள் இருந்திருந்தால், அந்த நடக்கையால் மேற்கொள்ளப்படாமல் இருந்திருக்கவும் வாய்ப்பிருக்கிறது.

துணிகரமாகச்செய்கிற தவறுபற்றி பவுல்அங்குக் குறிப்பிடவில்லை; அவர் பயன்படுத்தும் வார்த்தையிலிருந்து அது புரிகிறது. '**பேரப்டோமா**' எனும் கிரேக்க வார்த்தைதான் 'குற்றம்' அல்லது 'பாவம்' என்று அங்கு வருகிறது. துணிகரமான பாவத்தை அல்ல, தெரியாமல் செய்த தவறை அல்லது ஒரு தடுமாற்றத்தை அல்லது தவறுதலாகக் காலடி எடுத்துவைப்பதை அந்த வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. ஆவியினால் 'நடத்தல்'பற்றி இதற்குமுன் அவர் பேசிவருவதால், தவறுதலாகக் காலடி எடுத்து வைப்பதைத்தான் இங்கு அவர் குறிப்பிட்டிருக்க வேண்டும். அதற்காக, இதைவைத்து ஒருவர் தன் தவறை நியாயப்படுத்தமுடியாது. 1கொரி 5:1-5.

அப்படிப்பட்ட சூழ்நிலைகளில் ஒருவரைத் தண்டிக்கவோ, குற்றவாளியாகத் தீர்க்கவோ, சபையைவிட்டு நீக்கவோ கூடாது; அவரைச் சீர்பொருந்தப்பண்ண வேண்டும். இதற்கான கிரேக்க வார்த்தை '**கடார்டிஃஸ்ஸோ**'. அதற்குச் 'சரிசெய்தல்' அல்லது 'ஒழுங்குபடுத்துதல்' என்று அர்த்தம். மத் 4:21 இல், மீன் வலைகளைப் 'பழுதுபார்த்தல்' என்பதற்கு இவ்வார்த்தை பயன்பட்டுள்ளது. மேலும், உடைந்த எலும்பைச் சரிசெய்வதை விவரிக்கும் சொல்லாகவும் பயன்படுகிறது. அதுபோல், இடறிவிழுந்து, கால் ஒடிந்துவிட்ட நம் சகவிசுவாசி ஒருவரை நாம் புறக்கணிக்கக் கூடாது. தேவராஜ்யத்தின் பாதையில் ஒன்றாக நடந்துசெல்லும்போது, கால் இடறி விழும் நம் சகோதர, சகோதரிகளின்மேல் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையின் அங்கத்தினர்களாகிய நாம் பரிவான அக்கறை காட்டவேண்டும்.

யார் மேலாவது நமக்குக் கோபம் இருக்குமானால், மத் 18:15-17 வசனங்களின்படி நடப்பதற்குப் பதிலாக, அவரைப்பற்றி மோசமாகப் பேசுவதுதான் பொதுவாக நம் வழக்கமாக இருக்கிறது. கோபம் தலைக்கேறி, பழிவாங்கக்கூடத் திட்டமிடுகிறோம். அது ஏன்?

*'அப்பொழுது நாத்தான் தாவீதை நோக்கி: நீயே அந்த மனுஷன்' என்றான். 2சாமு 12:7.*

கட்டுப்பாடோடு வாழாவிட்டால் நாமும் சோதனைக்குள் விழநேரிடும் என்று கலா 6:1 இல் பவுல் அக்கறையோடு எச்சரிக்கிறார். இதைச் சாதாரணமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. அந்த ஆலோச னையை அவர் சொல்லும்விதத்தில், அவருடைய தனிப்பட்ட அக்கறை தெரிகிறது. 'எச்சரிக்கையாயிரு' என்பதைக் 'கவனமாயிரு' அல்லது 'மிகவும் கவனம் அவசியம்' என்றும் மொழி பெயர்த் திருக்கலாம். ரோமர் 16:17; பிலி 2:4. பாவம் திடீரென உங்களை மேற்கொண்டு விடாதபடி, 'உங்கள் மேல் ஒரு கண்வையுங்கள்' என்று பவுல் சொல்கிறார். கலா 6:1 இன் முதற்பாதியில் 'நீங்கள்' என்கிறவர், இந்த எச்சரிப்பை வலியுறுத்தும்படி பிற்பாதியில் 'நீ' என்கிறார். எனவே, இது சபை அனைத்திற்கும் கொடுக்கப்படும் பொதுவான எச்சரிப்பு அல்ல; சபை விசுவாசிகள் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட விதத்தில் கொடுக்கப்படும் எச்சரிப்பாகும்.

எந்தச் சோதனைகுறித்துக் கலாத்தியரைப் பவுல் கடுமையாக எச்சரிக்கிறா ரெனக் குறிப்பிட்டுச் சொல்லவில்லை. ஏதோ குறிப்பிட்ட ஒருவகை குற்றத்தை பற்றி அவர் பேசாமல், எந்தக் குற்றத்தின்நிமித்தம் பிறரைச் சீர்பொருந்தப்பண்ண நினைக்கிறார்களோ, அதே குற்றத்தை இவர்களே செய்யாதிருக்க எச்சரித்திருக்க லாம். அதே நேரம், கலா 5:26 இல் 'வீண் புகழ்ச்சிக்கு' எதிராக அவர் எச்சரிக்கிறார். எனவே, திருத்தப்படுகிறவர்களைவிட, தாங்கள் உயர்வென்று திருத்துகிறவர்கள் நினைக்கலாகாது.

***ஆவிக்குரிய விஷயத்தில் பெருமைபாராட்டாதபடி கலாத்தியரைப் பவுல் எச்சரிக்கவேண்டிய அவசியம் என்ன? 1கொரி 10:12; மத் 26:34; 2சாமு 12:1-7.***

ஆவிக்குரிய வாழ்வுகுறித்துப் பெருமைபாராட்டுவது மிகப்பெரிய ஆபத்து; 'ஒரு சில பாவங்கள் என்னை அண்டவே முடியாது' எனும் எண்ணத்தை அது தந்துவிடுகிறது. எல்லோரும் ஒரேயளவு பாவ இயல்பைப் பெற்றிருக்கிறோம் என்பதுதான் உண்மை; அது தேவனுக்கு எதிரான ஓர் இயல்பு. எனவே, தேவ ஆவியானவர் தம் வல்லமையால் நம்மைக் கட்டுப்படுத்தாதபட்சத்தில், சரியான சூழ்நிலை வாய்க்கும்போது, எந்தவொரு பாவத்திலும் நாம் மூழ்கிவிட வாய்ப் பிருக்கிறது. இப்படி நம்மைப்பற்றி நாம் உள்ளபடி அறிந்துகொள்ளும்போது, சுயநீதி எனும் பாவத்தில் விழுந்துவிடாமல் தடுக்கப்படுகிறோம்; தவறுசெய்ப வர்கள்மேல் மிகுந்த இரக்கம்காட்டுகிறவர்களாக மாறுகிறோம்.

பிறர் தவறுசெய்யும்போது அவர்களை (நம் மனதிலாவது) குற்றப்படுத்திக்கொண்டே இருப்போம். என்றாவது ஒருநாள் அதே தவறை நாமும் செய்கிற ஆபத்து ஏற்படுகிறதா?

## பாரம் சுமத்தல் (கலா 6:2–5)

***குற்றஞ்செய்தவர்களைச் சீர்பொருந்தப்பண்ணும்படி கூறிவிட்டு, கலாத்திய விசுவாசிகளுக்கு பவுல் கொடுக்கும் அடுத்த ஆலோசனை என்ன? கலா 6:2-5; ரோமர் 15:1; மத் 7:12.***

கலா 6:5 இல் 'பாரம்' என்பதற்கான கிரேக்க வார்த்தை '**பாரோஸ்**'. அதிக தூரம் ஒருவர் சுமக்கவேண்டியிருக்கும் பளுவான சுமையை அது குறிக்கிறது. காலப்போக்கில், நாள் முழுவதும் வெயிலின் உஷ்ணத்தில் நின்று வேலைசெய்யும் சுமையை, வாழ்க்கையின் இன்னல்களைச் சுட்டிக்காட்டும் ஓர் உருவகமாக அது மாறிவிட்டது. மத் 20:12. ஒழுக்கக்கேட்டின் விளைவால் ஏற்படும் பாரத்தை இது சுட்டிக்காட்டுவதாகவும் சிலர் கூறுகிறார்கள்.

'ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து' எனும் பவுலின் வார்த்தையில் ஒழுக்கக் கேட்டின் பாரமும்கூட அடங்கியிருக்கலாம். நாம் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டிய ஆவிக்குரிய உண்மைகள் பல பவுலின் போதனையில் உள்ளன.

**முதலாவது,** "எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் பாரங்கள் உண்டு. தேவன் நமக்கு அருளியிருக்கும் வாழ்க்கையைப் பொறுத்து, நம் பாரங்கள் அளவிலும் உருவிலும் விதத்திலும் மாறுபடலாம். சோதனையில் வீழ்ந்து, ஒழுக்கத்தில் தவறுவதால் பாரமடையலாம். வியாதியோ, மனநோயோ, குடும்பப் பிரச்சனையோ, வேலை இல்லாமையோ, பிசாசின் நெருக்குதலோ, வேறு ஏதோ பாரமாக இருக்கலாம். ஆனால், பாரமே இல்லாத கிறிஸ்தவர் எவரும் இல்லை."

**இரண்டாவது,** நம் பாரம் அனைத்தையும் நாம்மாத்திரமே சுமப்பது தேவ நோக்கமல்ல. பிறர் தங்கள் பாரத்தைச் சுமப்பதற்கு நாம் உதவ விரும்புகிறோமே தவிர, நம் பாரத்தைச் சுமப்பதற்குப் பிறர் உதவுவதை நாம் அனுமதிப்பதில்லை. இத்தகைய தன்னிறைவான போக்கை, பெருமைபாராட்டுதலென பவுல் கண்டிக்கிறார். கலா 6:3. அதாவது, நமக்கும் பெலவீனங்களும் தேவைகளும் உண்டென நாம் ஒத்துக்கொள்ள மறுப்பது பெருமைபாராட்டுதல். இத்தகைய பெருமை பாராட்டுதலால், பிறருடைய ஆறுதல் நமக்குக் கிடைக்காமல் போகிறது; தேவன் பிறருக்குக் கட்டளையிட்டுள்ள ஊழியத்தை அவர்கள் செய்யவிடாமல் தடுக்கிறது.

நாம் பிறர் பாரங்களைச் சுமக்கும்போது, தேவனுடைய ஆறுதல் வெளிப்படுகிறது. 'ஆகிலும், சிறுமைப்பட்டவர்களுக்கு ஆறுதல் செய்கிற தேவன் தீத்து வந்ததினாலே எங்களுக்கு ஆறுதல்செய்தார்' எனும் பவுலின் வார்த்தைகள் இதை எடுத்துக்காட்டுகின்றன. 2கொரி 7:6. பவுல் தனியாக ஜெபம் செய்து, கர்த்தருக்குக் காத்திருந்தபோது, தேவ ஆறுதல் அவருக்கு அருளப்படவில்லை. ஆனால், அவருக்கு அருகிலிருந்தவர்களாலும், அவர் பிரசங்கித்து வந்த நற்செய்தியின் மூலமாகத்தான் தேவன் அவருக்கு ஆறுதல் அருளினார். ஒருவர் பாரத்தை ஒருவர் சுமக்கும் தன்மையை மனிதரின் தோழமையில் காணலாம். இதுவும் தேவன் தம் மக்களைக் குறித்து நினைத்திருக்கிற நோக்கங்களில் ஒன்றாகும்.

பெருமை, வெட்கம், நம்பிக்கையின்மை, சுயநிறைவு போன்றவற்றில் எது பிறர் உதவியை நீங்கள் நாடாதபடிச் செய்கிறது? நீங்கள் நம்புகிற ஒருவரிடம் சென்று, உங்கள் பாரங்களைப் பகிர்ந்துகொள்ளும்படி அவரிடம் ஏன் கேட்கக்கூடாது?

## கிறிஸ்துவின் பிரமாணம் (கலா 6:2–5)

புதன்
செப்டம்பர் 20

***பாரத்தைச் சுமப்பது கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுதல். 'கிறிஸ்துவின் பிரமாணம்' என்று அவர் எதைக் குறிப்பிடுகிறார்? கலா 5:14; 6:2; யோவான் 13:34; மத் 22:34-40.***

---

---

'கிறிஸ்துவின் பிரமாணம்' எனும் பவுலின் சொற்றொடர்கள் வேதாகமத்தில் வேறெங்கும் காணப்படவில்லை. ஆனால், இதுபோன்ற ஒரு வாசகம் 1கொரி 9:21 இல் உள்ளது. இந்தத் தனித்தன்மையால் இதற்குப் பல்வேறு விளக்கங்கள் தருகிறார்கள். 'பிரமாணம்' என்பது பொதுவான ஒரு 'நியதி' என்றும் (ரோமர் 7:21), பிறருடைய பாரங்களைச் சுமப்பதால் நாம் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுவதையே பிரமாணம் என்னும் இவ்வார்த்தை பேசுகிறது என்கிறார்கள். இதில் ஓரளவு உண்மை இருக்கிறது. ஆனால், இவ்வசனம் சொல்லப்படும் சூழ்நிலையையும், கலா 5:14 வசனத்தோடு இதற்குள்ள ஒற்றுமைகளையும் பார்க்கும்போது, 'கிறிஸ்துவின் பிரமாணத்தை நிறைவேற்றுவது' என்பது, அன்பினால் மோசேயின் நியாயப்பிரமாணத்தை நிறைவேற்றுவதைச் சுட்டிக்காட்டுவது தெரிகிறது. இயேசுவின் வருகையால் ஒழுக்கப்பிரமாணம் அவமாகவில்லையென்று தன் நிருபத்தில் பவுல் சொல்லியிருக்கிறார். அன்பை அடிப்படையாகக்கொள்ளும் ஒழுக்கப்பிரமாணம் கிறிஸ்தவ வாழ்க்கையில் இன்றும் முக்கியப் பங்காற்றி வருகிறது. இயேசு தம் பூலோக ஊழியக்காலத்தில் போதித்ததும், தம் வாழ்வாலும் மரணத்தாலும் நிறைவேற்றியதும் இதுதான். பிறருடைய பாரங்களைச் சுமக்கும்போது, இயேசுவின் காலடிகளைப் பின்பற்றுகிறோம்; பிரமாணத்தையும் நிறைவேற்றுகிறோம்.

கலா 6:2 உம் கலா 6:5 உம் ஒன்றுக்கொன்று முரணாக இருப்பதாகவும் குழப்பம் நிலவுகிறது. ஆனால், இரண்டு சூழ்நிலைகளை விவரிக்க பவுல் இருவேறு வார்த்தைகளைப் பயன்படுத்தியிருப்பதை அறிந்தால் இந்தக் குழப்பம் நீங்கும். வச 2 இல் சொல்லப்படும் பாரம் (பரோஸ்) நீண்டதூரம் சுமந்துசெல்லவேண்டிய அதிக பளுவான சுமையைச் சுட்டிக்காட்டுவது. வசனம் 5 இல் சொல்லப்படும் 'ஃபோர்டியொன்' எனும் வார்த்தை ஒரு கப்பலின் பாரத்தை, ஒரு வீரனுடைய முதுகுச் சுமையை அல்லது கருவிலிருக்கும் சிசுவின் பாரத்தைச்சுட்டிக்காட்டுவது. முந்தின பாரங்களை இறக்கி வைத்துவிடலாம்; ஆனால் இது அப்படியல்ல. ஒரு கர்ப்பிணித்தாய் தன் குழந்தையைச் சுமந்துதான் ஆகவேண்டும். எனவே, சில வகை பாரங்களைப் பிறர் நம்மோடு பகிர்ந்துகொள்ளமுடியும். ஆனால், வேறுசில பாரங்களை எந்த மனிதனாலும் பகிர்ந்துகொள்ளமுடியாது. குற்றவுணர்வு, துன்பம், மரணம் போன்ற பாரங்கள் அப்படிப்பட்டவை. இவற்றிற்கு தேவனுடைய உதவியை மாத்திரமே நாம் சார்ந்திருக்கவேண்டும். மத் 11:28-30.

சில பாரங்களுக்கு மனிதரின் உதவியைப் பெறலாம். வேறு சில பாரங்களுக்கு ஆண்டவர்மாத்திரமே உதவமுடியும். உங்களால் சுமக்கக்கூடாத பாரத்தை ஆண்டவரிடம் கொடுத்துவிட என்ன செய்யலாம்?

## விதைப்பும் அறுப்பும் (கலா 6:6–10)

கலா 6:7 இல் உள்ள 'பரியாசம்' என்பதற்கான 'மூக்டெய்ரிட்ஸோ' எனும் கிரேக்க வார்த்தை புதிய ஏற்பாட்டில் இங்குமட்டும்தான் வருகிறது. ஆனால், கிரேக்க பழைய ஏற்பாட்டில் பல இடங்களில் இவ்வார்த்தை உள்ளது. 'அவமதிக்கும்படி ஒருவரை வெறுப்புடன் நடத்துவது' என்று இதற்கு அர்த்தம். பழைய ஏற்பாட்டில், தேவனுடைய தீர்க்கதரிசிகளைப் புறக்கணிப்பதை இந்த வார்த்தை சுட்டிக்காட்டுகிறது. 2நாளா 36:16; எரே 20:7. தேவனுக்கு எதிரான கலக மனப்பான்மையைச் சுட்டிக்காட்டவும் எசே 8:17 இல் இந்த வார்த்தை பயன்பட்டுள்ளது. 'மனிதர் தேவனைப் புறக்கணிக்கலாம்; கற்பனைகளை அவமதிக்கலாம். ஆனால், தேவனை ஏமாற்றமுடியாது. கடைசியில் அவரே நியாயந்தீர்ப்பார். தங்கள் செயல்களுக்கேற்ற பலனை அவர்கள் அடைந்தே தீரவேண்டும்' எனும் கருத்தைத்தான் பவுல் வலியுறுத்துகிறார்.

***கலா 6:8 இல் பவுல் சொல்வது என்ன? ஆவிக்கென்று, அல்லது மாம்சத்திற்கென்று விதைத்த வேதாகம நபர்கள் சிலர்பற்றிக் கூறுங்கள். அப் 5:1-5; லூக் 22:3; தானி 1:8; மத் 4:1.***

விதைப்பு, அறுப்புபற்றி பவுல் சொல்வது புதியதொரு செய்தியல்ல; ஆவியையும் மாம்சத்தையும்பற்றிப் பேசிவரும் நிலையில் பவுல் இந்தத் தத்துவத்தைப் பயன்படுத்துவதுதான் இங்குக் குறிப்பிடத்தக்கது. தேர்ந்தெடுக்க நமக்குச் சுதந்தரம் இருக்கிறது; ஆனால், நம் தேர்வின் விளைவுகளைத் தேர்ந்தெடுக்க நமக்குச் சுதந்தரம் இல்லை. இப்பூமியில் நம் பாவத்தால் ஏற்படும் விளைவுகளிலிருந்து ஆண்டவர் எப்போதும் விடுவிப்பதில்லை. ஆனால், நம் தவறான தீர்மானங்களால் நாம் மனமுறிய வேண்டியது இல்லை. தேவன் நம் பாவங்களை மன்னித்து, தம்முடைய பிள்ளைகளாக நம்மைச் சுவீகரித்திருக்கிறார். அதினிமித்தம் மிகுந்த மகிழ்ச்சி அடையலாம். பரலோக அறுவடையைக் கொடுக்கும் காரியங்களில் நாம் முதலீடு செய்ய நமக்குள்ள தருணங்களை நாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

கிறிஸ்தவர்களுக்கு இரண்டு கடமைகள் உண்டென கலா 6:10 கூறுகிறது. முதலாவது, 'எல்லாருக்கும் நன்மைசெய்தல்'. இரண்டாவது, 'விசேஷமாக விசுவாசக் குடும்பத்தாருக்கு நன்மைசெய்தல்' 'எங்குமுள்ள எல்லா மனிதரும் தேவ சாயலில் படைக்கப்பட்டிருக்கிறார்கள். எனவே, தேவனுக்கு அவர்கள் மிகவும் விலையேறப்பெற்றவர்கள்' எனும் அடிப்படையில் முதலாம் உண்மையைச் சொல்கிறார். வேதாகமம் சொல்லும் இந்த உண்மையைக் கிறிஸ்தவர்கள் மறக்கும் போதெல்லாம், இன வேறுபாடு, பாலினப் பாகுபாடு, ஜாதியுணர்வு, குலப்பற்று போன்ற ஆயிரக்கணக்கான மூடத்தனப்பழக்கங்களில் சிக்கி, பாவத்தில் விழுகிறார்கள். ஆதாம்-ஏவாள் காலம்முதல் இன்றுவரை மனித இனத்தை இவை சீர்கெடுத்து வருகின்றன.

நீங்கள் விதைக்கும் போதெல்லாம் நன்மைக்கோ தீமைக்கோ விதைக்கிறீர்கள். உங்களைச் சீர்தூக்கிப் பாருங்கள். எப்படிப்பட்ட அறுவடையை அறுக்கப்போகிறீர்கள்?

"தீமையை ஆவியானவர் நம் மனச்சாட்சியின் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார். அவரின் தூண்டுதலுக்குக் கீழ்ப்படியாமல் மனிதன் தன்னை உயர்த்தும்போது, அக்கிரமத்தை அறுக்கிறான். கீழ்ப்படியுமாறு ஆவியானவர் ஏற்படுத்தும் தாக்கம் அவனில் குறைந்துவருகிறது. எச்சரிப்புக்கு செவிகொடுப்பது குறைகிறது. தேவனுக்குப்பயப்படுவதைப்படிப்படியாக இழக்கிறான். அவன் மாம்சத்திற்கேற்றபடி விதைப்பதால், தீமையை அறுப்பான். அவன் எதை விதைத்தானோ அதை அறுக்கும் காலம் வருகிறது. தேவனுடைய பரிசுத்த கட்டளைகளை பரியாசம்பண்ணுகிறான். சதையான இருதயம் கல்லான இருதயமாக மாறுகிறது. சத்தியத்தைப் புறக்கணித்து, அக்கிரமத்திலேயே அவனை வைக்கிறது. தீமையின் விதைகளை மனிதன் விதைத்ததால், சட்டத்துக்குப் புறம்பான போக்கும்குற்றமும்வன்முறையும்ஜலப்பிரளயத்திற்குமுன் இவ்வுலகில்நிறைந்திருந்தது.

மனிதனை அவர் ஆவிக்குரிய குருடனாக்குவதில்லை. சத்தியத்தைப் பகுத்தறியும் திறனை மனிதன் பெறும்படி, போதுமான வெளிச்சமும் ஆதாரமும் தேவன் கொடுக்கிறார். ஆனால், சத்தியத்தை அறிந்துகொள்ளும்படி கட்டாயப்படுத்துவதில்லை. தீமை அல்லது நன்மையைத் தேர்ந்தெடுக்க அவர் அவனுக்குச் சுதந்தரம் கொடுக்கிறார். சரியான திசையில் செல்ல அவன்தான் தீர்மானிக்கவேண்டும். அவர் தருகிற ஆதாரங்களைப் புறக்கணித்து, தீமையைத் தேர்ந்தெடுத்தால், இரண்டாம்முறை அதே தவறை எளிதில் செய்கிறான். மூன்றாம்முறை அவன் இன்னமும் ஆவலோடு தேவனிடமிருந்து தன்னை விலக்கி, சாத்தானின்பக்கம் நிற்கிறான். உண்மையென்று அவனே வளர்த்த பொய்யை அவன் நம்பி, தீமையில் உறுதியாக நிற்கும்வரை இந்தப் போக்கையே கடைப்பிடிக்கிறான். அவன் எதற்கு எதிர்த்து நின்றானோ, அதற்கேற்ற பலனை இப்போது அடைகிறான்." – *EGW, 6 SDABC, p 1112.*

## கலந்துரையாடக் கேள்விகள்

1. *பாவத்தில் விழுந்த ஒருவரைச் சீர்பொருந்தப்பண்ணுவது என்றால் நடைமுறைரீதியில் என்ன? ஒருவர் எப்படிப்பட்ட பாவத்தைச் செய்தாரென்பது, சீர்பொருந்தப்பண்ணுவதில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துமா? சீர்பொருந்தியபின் எல்லாம் முன்புபோல் மாறிவிடுமா?*
2. *பாரங்களை தாங்களே சுமந்தாகவேண்டிய சிலருக்கு (கலா 6:5) உதவிசெய்வதை, ஒரு விசுவாசி எதை வைத்துத் தீர்மானிக்கலாம்?*

**பாடச்சுருக்கம்:** *சபைக்குள் கிறிஸ்துவைப் போன்ற மனநிலை வெளிப்படுவதுதான், தம் மக்கள் மத்தியில் தேவன் இருக்கிறாரென்பதற்கு அத்தாட்சி. தவறுசெய்தோரை மன்னிப்பது, சீர்பொருந்தப்பண்ணுவது, சோதனைகளில் ஒருவருக்கு ஒருவர் உதவுவது, தங்கள் சக விசுவாசிகளுக்கும் பிறருக்கும் அன்பின் செயல்களைச் செய்வது ஆகியவற்றில் அதை நாம் காணலாம்.*

# பாருங்கள் கேளுங்கள்

## காக்கும் கரங்கள் நிகழ்ச்சிகள்

## உங்கள் கேள்வியின் நேரம்

தேவ செய்தியாளர்கள்: போதகர் சாத்ராக் சாமுவேல்,

டாக்டர் ஏ. ஜான்சன்

தமிழன் தொலைக்காட்சியில் சனிக்கிழமை காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## சுபவார்த்தா

**Big TV** யில் தெலுங்கு நிகழ்ச்சிகளை காலை 7.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## ஹோப் டிவி நிகழ்ச்சிகள்

அனுதினமும் காலை 6.00 மணிக்கும், 8.30 மணிக்கும், மாலை 6.00 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் காணத்தவறாதீர்கள்

## ஆசீர்வாத நம்பிக்கை

இமயம் தொலைக்காட்சியில் சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் காலை 6.00 மணிக்குக் காணத்தவறாதீர்கள்

## அட்வென்ட்டிஸ்ட் வேர்ல்டு ரேடியோ

அனுதினமும்: பிற்பகல் 3 மணிக்கு 19 மீட்டர் பேண்ட்,

15680 கிலோ ஹெட்ஸில் கேட்கத்தவறாதீர்கள்

---

## வலைதளத்தில் (Internet இல்)

## ஓய்வுநாட்பள்ளிப் பாடங்கள்

அந்தந்த வாரத்துக்குரிய ஓய்வுநாட்பள்ளிப் பாடத்தை வீடியோவாகப் பார்க்கலாம்.

**YOUTUBE** க்குப் போய்,

## Mogappair SDA Tamil Sabbath School Lesson

என்று டைப் பண்ணினால் பாடங்கள் வரும்.
அந்த வாரத்துக்குரிய பாட எண்ணைத் தேடிப்பார்த்துக் கேட்கவும்.